UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - OCTOBER 2019
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2019 ஒக்டோபர்

**தமிழ் 1 (TG 1)**

# தமிழ் மொழி வரலாறும் இலக்கண மரபுகளும்

# HISTORY OF TAMIL LANGUAGE AND GRAMMATICAL TRADITION

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக **08** வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

## பகுதி 1

1. தமிழ்மொழி வரலாற்றை அறிந்துகொள்வதில் இதுவரை நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களும், இலக்கண நூல்களும் எவ்வாறு பயன்படுகின்றன என்பதைத் தெளிவுபடுத்துக.

2. பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்பதில் காலம்தோறும் ஏற்பட்டுவந்த மாற்றங்களை ஆராய்க.

3. வினையெச்சம் பற்றி விளக்கி, சங்க காலத்திலிருந்து தற்காலம்வரை வினையெச்ச வடிவங்களில் ஏற்பட்டுவந்த மாற்றங்களை ஆராய்க.

4. தமிழில் பிறமொழிக் கலப்பின் வரலாற்றைச் சுருக்கமாக விளக்கி, இப்பின்னணியில் தனித்தமிழ் இயக்கம் பற்றிக் கருத்துரை வழங்குக.

மபபா

## பகுதி 11

5. தமிழ் இலக்கண மரபை ஐந்திலக்கண மரபு என்று கூறுவதற்கான காரணிகளை ஆராய்க.

6. தொல்காப்பியம் கூறும் இலக்கண மரபிலிருந்து வீரசோழியம் கூறும் இலக்கண மரபு எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

7. தமிழ் இலக்கண நூல்கள் இடைச்சொற்களுக்குக் கூறும் வரைவிலக்கணத்தைத் தெளிவுபடுத்தி, இடைச்சொல் வகைகளை உதாரணம் தந்து விளக்குக.

8. தமிழ் இலக்கண நூல்கள் பெயர்ச்சொற்களைப் பால் அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்துகின்றன என்பதைத் தெளிவுபடுத்தி, தற்காலத் தமிழைப்பொறுத்தவரை இவ்வகைப்பாடு பொருந்துமா என ஆராய்க.